# சித்தர்களின் மருத்துவம்

1

**முனைவர் ச.குருஞானாம்பிகா (SG),**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,**
**கோயம்புத்தூர் - 43**
guruambika@gmail.com, ORCid: 0009-0009-0277-1697

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தர்கள் தமது யோக நெறியால் பல்வேறு ஆற்றலைப் பெற்றிருந்தவர்களாக திகழ்ந்திருக்கிறார்கள். கூடுவிட்டு கூடு பாயும் ஆற்றல் நோய்களுக்கான மருத்துவ அறிவு பெற்றிருத்தல், ஐம்புலன்களையும் அடக்குதல் உள்ளிட்ட இவர்கள் பாடியுள்ள பாடல்கள் பொருட்செறிவுடையதாகவும், யோக நெறியையும் ஞான நெறியையும் எடுத்துரைப்பதாகவும், மருத்துவ வழிகாட்டுதல்களாகவும் அமைந்திருக்கின்றன. உலகில் உள்ள எல்லா சமயங்களும் அன்பையே நிலை நிறுத்துவது போன்று, அன்பே அனைத்திற்கும் அடிப்படை என்கிற கருத்தையும் ஞானிகளாகத் திகழ்ந்த சித்தர்கள் எடுத்துரைத்தனர். சித்தர்கள் கண்டறிந்த உடல் நோய்களும், அதற்கான மருத்துவ விளக்கங்களும் இன்றளவும் போற்றப்படுவனவாக , தமிழ்ச் சமூகத்தில் விளங்குகின்றன. சித்தர் பாடல்களின் வழி அறியப்படும் கருத்துக்கள் அனைத்தும் தமிழ் கூறும் நல்லுகத்திற்கு கிடைத்திருக்கக்கூடிய அரிதினும் அரிதான எழுத்துப் பெட்டகமாகும்.

**திறவுச் சொற்கள்:** சித்தர் வாக்கு – மூலிகைகள் - சித்தாந்தம் - அந்தாதி – சித்தர்களும் மருத்துவமும்

**முன்னுரை**

சித்தர்கள் தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் எண்ணற்றவை. மருத்துவம், யோகம் என அகவளர்ச்சிக்கும், புறநலனுக்கும் உரியதை எடுத்துரைத்திருக்கின்றனர். சித்த மருத்துவத்தில் நோய்நாடி நோயைக் கண்டறியும் தேர்வுமுறை சிறந்து காணப்படுகிறது. நோயைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு வகை மருத்துவத்திலும் வெவ்வேறு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சித்த மருத்துவத்தில் காணப்படும் நோய்த்தேர்வு முறை பிற மருத்துவ முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவும்,; சிறந்தத் தேர்வு முறையாகவும் கருதமுடிகிறது.

அந்த சித்தர்கள் குறித்தும், சித்தர் வாழ்க்கைக் குறித்தும், அவர்கள் ஆற்றிய பணிகள் குறித்தும் அறிவது கட்டுரைப் பொருளாக அமைகிறது.

**சித்தர்களின் பணிகள்**

சித்தர்கள் இம்மை, மறுமை வாழ்க்கை முறைகள்; மற்றும் யோக முறைகள் பற்றியும் அதிகமாக உபதேசங்களைச் செய்திருக்கின்றார்கள். அஃறிணை உயிரி;களுக்கும் உபதேசம் செய்திருக்கின்றார்கள்.

மருத்துவத்தின் தந்தை சித்தர்களே ஆவர். போகர் கொங்கணவர் கருவூரார். அகத்தியர் போன்ற பல சித்தமருத்தவர்கள் அக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். திருமூலரால் போற்றப்பட்டவர் போகர் ஆவார். திருமூலரின் சீடரும் அவரே. வான மண்டலத்தில் உள்ள பல்வேறு நட்சத்திர மண்டல அடுக்குகளைப் பார்க்கலாம். இவைமட்டுமல்ல. இந்த மூலிகைகளின் சாற்றால் அறுபத்து நான்கு பாணங்களின் கட்டு உண்டாகும். இவற்றின் ரசம் கட்டியாய் மூலிகை மணியாகும் என்று கூறுகின்றனர். ஒவ்வொரு மூலிகையின் வேர் தண்டு இலைகாய் பூ கொட்டைகள் போன்றவற்றின் தனித்தன்மைகளை அக்காலச் சித்தர்கள் நன்கு ஆராய்ந்துள்ளனர். குழந்தைகள் பிறப்பதைப் பற்றியும் அக்காலச் சித்தர்கள் நன்கு ஆராய்ந்து அறிந்துள்ளனர்.

**சித்தர் வாழ்வும் வாக்கும்**

விஞ்ஞானம் விழிதிறக்காத காலத்திலேயே மெய்ஞ்ஞானத்தாலும், சித்த சுத்தியாலும், தபோபலத்தாலும் அரும்பெரும் சாகசங்களை சாதனைகளைச் செய்தார்கள் நமது சித்தர்கள்.

சித்தர்கள் தாங்கள் செய்த சாகசங்களுக்குக் கருவியாகப் பயன்படுத்தியது மூலிகைகளைத்தான். தங்கள் அயராத ஞானத் தேடல்கள் மூலம் மனிதகுலத்துக்குக் கண்டு தந்த மூலிகை ரகசியங்கள் வியப்புக்குரியவை. சகல வித்தைகளுக்கும் ஆதாரமானவை.

மண் மறைத்ததை மனக்கண்ணால் அறிந்து கொண்டவனே மகாசித்தன். புதையலைக் காட்டும் அபூர்வ மூலிகை சக்தியை நன்கு அறிந்தவர்கள் சித்தர்கள் சமணச் சித்தர்கள் சல்லியம் (புதையல்) பார்த்தல் என்னும் ஆருடக் கலையில் வல்லவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

மனிதர்களைப் போலவே மூலிகைகளும் பல்வேறு அனுபவங்களையும் சக்திகளையும் உடையவை. மனித ஆரோக்கியத்திற்கு மட்டுமின்றி மந்திர தந்திர விளையாட்டுகளுக்கும் போட்டிகளுக்கும் உயிர் காப்பதற்கும் பயன்பட்ட மூலிகைகளைப் போலவே மண்ணுக்குள் புதையுண்டு போன புதையல் ரகசியங்களையும் காட்டும் அற்புத மூலிகைகளை அக்காலத்துச் சித்தர்கள் அறிந்திருக்கின்றனர்.

சித்த மருத்துவம் மூலிகைகளையே மூலப்பொருளாகக் கொண்டுள்ளது. இயற்கை வழியமைந்த இலக்கியங்களும் மருத்துவங்களும் இயற்கைப் பொருளான மூலிகைகளின் குணநலன்களை அறிந்து அவற்றின் பண்புகளையும் மருத்துவ குணங்களையும் தம்முள் சேர்த்துக் கொண்டுள்ளன.

இந்தியா முழுவதும் ஏறக்குறைய 8000 மூலிகைகள் பல்வேறு மருத்துவப் பயன்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. சித்த மருத்துவம் ஆயுர்வேத மருத்துவம் போன்ற மருத்துவ முறைகள் ஒவ்வொன்றிலும் சராசரியாக 1700 மூலிகைகள் வரை பயன்படுத்தப்படுகின்றன.

கற்ப மூலிகைகள் ஞான மூலிகைகள், இரசவாத மூலிகைகள்; வசிய மூலிகைகள், மாந்திரீக மூலிகைகள், வழிபாட்டு மூலிகைகள்; பிணி தீர்க்கும் மூலிகைகள்; உடல் தேற்றி மூலிகைகள், உலோக மூலிகைகள் வர்ம மூலிகைகள,; விஷ மூலிகைகள்; நஞ்சை முறிக்கும் மூலிகைகள், எலும்பொட்டும் மூலிகைகள், சதை ஓட்டும் மூலிகைகள், பச்சைக் குத்தும் மூலிகைகள்,; பல் பிடுங்கும் மூலிகைகள், காதணி ஓம்பி மூலிகைகள் கருச்சிதைவு மூலிகைகள் என்று மூலிகைகள் பலவாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

செவ்வியல் சார்பும், மரபுச் சார்பும் கொண்ட கவிஞர்கள் ஊடகமாகப் பயன்படுத்தி வரும் பல்வகை வாய்ப்புகளையும் எளிமைப்படுத்தி தம் கருத்துக்களை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னே சித்தர்கள் கையாண்டுள்ளனர்.

அன்றியும் நாட்டுப்புற மக்களின் கலைவடிவங்களாக வழங்கி வந்த ஆனந்தக் களிப்பு, கும்மி, பல்வகைச் சிந்து, கண்ணி உந்தி, புலம்பல் முதலிய மக்கள் யாப்பிலும் தம் கருத்துக்களைப் புலப்படுத்தியுள்ளனர் சித்தர்கள். பாடல்களின் கருத்துக்களைப் பயில்பவர் மனதில் எளிதில் நிறுத்துதல் வேண்டும் என்ற கருத்தில் அந்தாதி அமைப்பினைப் பெரிதும் போற்றியுள்ளனர் சித்தர்கள்.

**திருமந்திரத்தில் அந்தாதி**

திருமூலரின் திருமந்திரத்தில் பல பகுதிகள் அந்தாதியாக அமைந்தவையாகும்.அகத்தியர் ஞானம்; இராமதேவர் பூசைவிதி, உரோம ரிஷி, ஞானம் கருவூரார் பூசை விதி, காகபுசுண்டர் பாடல்கள் சட்டைமுனி ஞானம் முதலிய சித்தர் படைப்புகள் பல அந்தாதி அமைப்பையுடையவை.

அகத்தியர் அமுதகலை ஞானம் 1200 என்ற நூலில் உள்ள பாடல்கள் யாவும் எண்சீர் விருத்தத்தில் அமைந்த அந்தாதி ஆகும். தன்வந்திரி வைத்தியம் 100 என்ற நூலும்

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர், தமிழ்த்துறை
மற்றும்
பிரணவ் ஆய்விதழ்
இணைந்து நடத்திய
பன்னாட்டுக் கருத்தரங்கம்
“பன்முக நோக்கில் சித்தர் இலக்கியங்கள்”
Special Issue: Volume 4 Issue 2

விருத்தயாப்பில் அந்தாதியாகப் பாடப் பெற்றுள்ள பனுவல் ஆகும்.மக்களுக்குப் புரியும் வகையில் பாடப்படும் செய்யுள் வனப்பிறகுப்புலன் எனப்பெயர் தந்தவர் தொல்காப்பியர் அகராதியைத் தேடாமலும் புலவரை நாடாமலும் பொருள் புலனாகும்படி அமையும் செய்யுள் வனப்பு புலன் என்றே புகலப் பெற்றது.

**"தெரிந்த மொழியாற் செவ்விதிற்கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்**
**புலன் என மொழிப் புலன் உணர்ந்தோரே" (தொல்.செய்யுளியல்:233)**

என்கிறது தொல்காப்பியம்.

சித்தர்களின் பாடல்கள் அனைத்திலும் சைவ சித்தாந்தத் தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன. திருமூலரின் திருமந்திரம் சமயத் தத்துவக் களஞ்சியமாக விளங்குகிறது. சைவ சித்தாந்தத்திற்கு ஏற்றம் கொடுத்துத் திருமூலர் பாடியிருத்தல் போலவே வேதாந்தத்திற்குள்ள சிறப்பும் தந்துள்ளார்.

**சித்தர்களும் சித்தாந்தமும்**

பிரமம் ஒன்றே உள்பொருள் உலகம் மாயைத் தோற்றம் உயிர்கள் பிரமத்தின் வேறாகா என்பது வேதாந்தக் கோட்பாடாகும். பதி, பசு, பாசம் என்ற மூப்பொருள் உண்மை பேசும் ஆகமாந்தம் எனப்படும் சைவ சித்தாந்தம் பலபொருள் உண்மை பேசுதலின் வேதாந்தத்தினின்றும் வேறுபட்டது.

திருமந்திரத்திலும் பிற சித்தர் பாடல்களிலும் அட்டாங்கயோகப் பயிற்சியினால் எய்தப்பெறும் எண்வகைப் பேறுகளான **அனிமா, இலகிமா, மகிமா, பிராப்தி, கரிமா, பிரகாமியம் ஈசத்துவம் வசித்துவம்** ஆகியவை பிரதானப்படுத்தப்படுகின்றன.யோக சாத்திரக் கருத்துக்கள் வேதாந்தக் கருத்துக்களுடன் தாந்திரிக வழிபாட்டு முறைகள் மந்திரக் சக்கரங்கள் பற்றிய விளக்கங்களும் அகத்தியார், கொங்கணவார், கருவூரார் போன்ற சித்தர்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

சித்தர் பாடல்களில் காயசித்தி உபாயம் பிரதான இடத்தினைப் பெறுகின்றதென்றால் மிகையாகாது. காயம் என்பது உடலைக் குறிக்கும் சித்தி என்பது சாதனை உடலைச் சிதையாதபடி நரைதிரை மூப்பினின்றும் முடிந்தால் இறப்பினின்றும் பாதுகாத்துக் கொள்ளும் சாகாக் கலையான காயசித்தி தொடர்புடையது. யோக சாதனத்தால் உடலை நீண்ட காலம் வாழச் செய்வது. சித்த மூலிகைகளால் உடலை நீண்ட காலம் பேணுதல் ஆகிய இருவழிகளில் காயசித்தி பெறலாம் என்பதைச் சித்தர் பாடல்கள் விளக்குகின்றன.

திருமூலர் வழிவந்த பிற்காலத்துச் சித்தர்களும் காயசித்தி பெறுதலை வலியுறுத்திப் பாடியுள்ளனர். தாயுமானவர் குதம்பைச் சித்தர் போன்றோர் அதற்கு எதிர்மறுப்பும் தெரிவித்துப் பாடியுள்ளனர்.

**“நெடுநாள் இருந்த பேரும்**
**நிலையாக வேயினும் காயங்களும் தேடி**
**நெஞ்சு புண்ணாவர்” (தாயுமா:பா:2:6-8)**

என்று தாயுமானவரும்,

**“மெய்ப்பொருள் கண்டு விளக்கு மெய்ஞ்ஞானிக்கு**
**கற்பங்கள் ஏதுக்கடி – குதம்பாய்**
**கற்பங்கள் ஏதுக்கடி” (குதம்பை.சித்தர்:பா:2)**

என்று குதம்பைச் சித்தரும் பாடியுள்ளனர்.

இரசம் என்பது பாதரசம். இதனைப் பயன்படுத்தி இரும்பு, பித்தளை,ஈயம், வெள்ளி முதலிய உலோகங்களைப் பொன்னாக மாற்றும் உபாயத்தினைச் சித்தர்கள் கண்டிருந்தனர். இதற்கு இரசவாத சித்தி என்று பெயர்.இரசவாதம் என்பது ஒரு கண்கட்டி வித்தை அன்று இந்திரசாலமுமல்ல. இதனால் இரும்பினைப் பொன்னாக்கலாம். போன் பிறகு இரும்பாக மாறாது . அது போலவே சற்குருவின் அருள்வாய்க்கப் பெற்றவன். மீண்டும் பிறவிக்கு வாரான் என்பது கருத்து இரசவாதம் என்பது இன்றைய இரசாயனவிஞ்ஞானத்திற்கு முன்னோடியாகக் கருதப் பெறுகின்றது.

இவ்வித்தையில் வல்ல சித்திரை பரிசனவேதி என்று பெயரிட்டுக் கூறுகின்றார் திருமூலர்.

**பரிசன வேதி பரிசித்த தெல்லாம்**
**வரிசை தரும் பொன் வகையாகுமாபோல்**
**குருபரிசித்த குவலயம் எல்லாம்**
**திரிமலம் தீர்ந்து சிவகதியாமே (திருமந்:பா:297)**

என்கிறது திருமந்திரம்,

இரசவாத வித்தை பிறவிக்கு ஏதுவாகிய ஆசையினை வளர்த்து விடும் என்று தாயுமானவர் அதனைத் துச்சமாகக் கருதுகிறார்.

**அம்பொன் மிக வைத்த பேரும்**
**நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர் (தாயுமா:பா:2:5-6)**

எனப் பாடியுள்ளார்.

அகப்பேய் சித்தரும் ரசவாத வித்தைக்கு எதிராக வெள்ளை கருப்பாமோ அகப்பேய் வெள்ளியும் செம்பாமோ? என்று வினவுகிறார்.

மூச்சுக்காற்றாகிய பிராணன் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் இடது நாடியில் ஓங்கியங்கும் ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாட்களில் வலது நாடியில் ஓங்கியங்கும் வியாழனில் வளர்பிறையில் இடது நாடியிலும் தேய்பிறையில் வலது நாடியிலும் உயர்ந்து இயங்கும் இதனைக் கணக்கிலெடுத்து ஆயுளைப் பற்றிச் சொல்லும் சோதிடம் சித்தர்களிடத்தில் இருந்தது.

திருமூலர் முதலான பல சித்தர்களும் தங்களது பாடல்களில் அறிவியல் கருத்துக்களைக் தெளிந்த நீரோடையாகக் கூறிச் சென்றுள்ளனர். கொல்லாமை கள்ளுண்ணாமை புலால் மறுத்தல் நடுவு நிலைமை பொய்கூறாமை காமம் கொள்ளாமை போன்ற நல்லொழுக்கங்களைச் சித்தர் பாடல்களில் நீக்கமறக் காணமுடியும்.சித்தர் நெறியென ஆராயப் புகுந்தால் சிவன் சித்தர் குழுவின் முதல்வனாகவும் முதல் சித்தனாகவும் கண்டறியப்பட்டுள்ளார். சிவனின் வழிவந்த சித்தர்கள் மரணத்தை வெல்லும் ஆற்றலைப் பெறுவதற்குரிய வழிகளைத் தெரிந்தெடுத்து அதன்வழி ஒழுகலாயினா.;சித்தர்கள் கண்டறிந்த உடல் தத்துவமும் பஞ்சபூதக் கொள்கையும் மருத்துவக் கோட்பாடுகளும் சைவ சமயக்கோட்பாடுகளில் கலந்திருப்பது அறிய முடிகிறது. சித்தர்கள் அடக்கமான இடங்களில் சைவக் கோயில்கள் உருவாகி வழிபாட்டிடங்களாக உருமாற்றம் பெற்றிருக்கின்றன.

**சித்தர்களும் மருத்துவமும்**

தமிழ் மருத்துவ நூல்கள் எளிமையான நடையும் நயமான சொற்களும் கொண்டவை. பயன் கலைகளில் முதன்னையான மருத்துவம் இலக்கியத்தரம் வாய்ந்தது. இலக்கியக் கூறுகளைக் கருவிகளாகக் கொண்டு நூல்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன. பயன்கலைகளில் முதன்மையான மருத்துவம், இலக்கியத்தரம் வாய்ந்த இலக்கியக் கூறுகளைக் கருவிகளாகக் கொண்டு சித்தர்களால் நூல்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான மருத்துவப் பாடல்கள் வெண்பாவிலேயே அமைந்திருக்கின்றன. விருத்தப் பாக்கள் பாடுவதற்கு எளிமையகவும், சொற்சிக்கனமில்லாமல் கூறப்படுகின்ற பொருளுக்கு ஏற்றவாறு செய்யுள் அளவு அமைந்து விடுவதாலும் விருத்தப்பாவில் மருத்துவப்பா என அமைத்துக் கொண்டனர் போலவும்.

தேரையர் நூல்கள் மட்டுமே பல்வகைப் பாக்களைக் கொண்டு அமைந்துள்ளன. தமிழ் மருத்துவ நூல்கள் தமிழ் இலக்கியத் தாக்கத்தினைக் கொண்டவையாக உள்ளன. தமிழ்ப்பா

வகைகளில் அவற்றின் படைப்புகள் காணப்படுவதுடன் அப்பாக்களில் பெயரையே நூலின் பெயராகக் கொண்டிருக்கின்றன.

**தொகுப்புரை**

சித்தர்கள் யோக நெறியில் முக்தி பெற்றவர்கள். சித்தர்கள் இந்த உலகத்திலுள்ள பொருளியல் சார் வாழ்க்கை நெறிகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள். தாங்கள் எண்ணிய ஓர் இலக்கை நோக்கிச் சென்று அதன் பயனை அறிந்து ஆனந்தம் கொள்பவர்கள். சமுதாய நெறிமுறைகள் எனும் இலக்கண வரைமுறைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் சித்தர்களின் நெறிகளில், சமுதாயத்தின் சீர்த்திருத்தத்தில் சித்தநெறிக்கு என்றொரு தனித்த இடம் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இயற்கை நிகழ்வான மரணத்தைத் தவிர்ப்பது சித்தர் நெறியின் நோக்கமாகும். சித்தர்கள் மேற்கொண்ட யோகம,; ஞானம் ஆகிய இரண்டுமே சமய எல்லைகட்கு உட்பட்டவை அல்ல. இவை இரண்டுமே நேர்க்கோட்டு நெறிகள் இடையில் தடை செய்ய எவருமில்லை என்பதை அறிந்து கொள்ள இயலுகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. இராஜாராம். துரை. டாக்டர், திருமூலர் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை, மு.ப: 2015
2. ஞானசம்பந்தன். அ.ச, திருமந்திரம், கங்கை புத்தக நிலையம், சென்னை, மு.ப: 2017
3. தமிழ்ப்பிரியன், பதினெட்டு சித்தர்களின் முக்கிய பாடல்களும் விளக்கங்களும், நர்மதா பதிப்பகம், சென்னை, மு.ப: 2015
4. தமிழ்ப்பிரியன், சித்தர்களின் அடிப்படைக் கொள்கைகள், ஸ்ரீ அலமு புத்தக நிலையம், சென்னை , மு.ப: 2013
5. பலராமய்யா. வி., சித்தர் கைகண்ட மருந்து, அமராவதி பதிப்பகம், சென்னை, மு.ப: 2016
6. முத்துக்கொத்தள மாரியப்ப செல்வராஜ், சித்தர் களஞ்சியம் சித்தர்களின் அற்புதங்கள், நர்மதா பதிப்பகம், சென்னை, மு.ப: 2015
7. ஜெகாதா, பகுத்தறிவுப் பாசறை குதம்பைச் சித்தர் ஆசிரியர், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, மு.ப: 2011